செய்தி வெளியீடு –668 15.8.2008

# சுதந்திர தினத்தையொட்டி ஊனமுற்றோர் – மகளிர் முன்னேற்றத்திற்காக சிறந்த முறையில் பாடுபட்டவர்களுக்கு மாநில விருதுகள்

## முதலமைச்சர் கலைஞர் வழங்கினார்

தமிழக அரசின் சுதந்திரதினக் கொண்டாட்டத்தின் ஒரு பகுதியாகச் சென்னை கோட்டை கொத்தளத்தில் தேசியக் கொடியை ஏற்றிவைத்தபின், மாண்புமிகு தமிழக முதலமைச்சர் கலைஞர் அவர்கள் ஊனமுற்றோர் மற்றும் மகளிர் நலன்களுக்காகச் சிறப்பாகத் தொண்டாற்றியவர்களுக்கும், நிறுவனங்களுக்கும் மாநில விருதுகளை அளித்து, ஊனமுற்ற குழந்தைகளுக்கு இனிப்புகளை வழங்கினார்கள்.

சமூகநலத்துறையின் சார்பில், ஊனமுற்றோர் மற்றும் மகளிருக்குச் சிறந்த சேவை செய்த தனிநபர்கள் மற்றும் நிறுவனங்களைக் கண்டறிந்து மாவட்ட ஆட்சியரின் பரிந்துரையின் பேரில் தெரிவு செய்யப்பட்ட தனிநபர்கள் ஆறு பேருக்கும், இரண்டு நிறுவனங்களுக்கும் மாநில விருதுகள் ஆண்டுதோறும் வழங்கப்படுகின்றன.

இத்திட்டத்தின்படி, 2008ஆம் ஆண்டிற்கான, “சிறந்த மாவட்ட ஊனமுற்றோர் மறுவாழ்வு அலுவலர்” விருது கிருஷ்ணகிரி மாவட்ட ஊனமுற்றோர் மறுவாழ்வு அலுவலர் திரு.சி. மணிமாறன்; “சிறந்த மருத்துவர்” விருது பார்வையிழப்பைத் தடுத்தல், பார்வையற்றோருக்குச் சீரிய வகையில் மருத்துவம் புரிதல் ஆகியவற்றில் தொண்டுகளாற்றிய சென்னையைச் சேர்ந்த டாக்டர் மோகன் ராஜன்; “சிறந்த சமூகப் பணியாளருக்கான விருது” சென்னை தேனாம்பேட்டையைச் சேர்ந்த திரு.ரெ. தங்கம்;

மகளிரின் பொருளாதார மேம்பாட்டிற்குச் சிறப்பாக பணியாற்றிய "சிறந்த சமூக பணியாளருக்கான விருது" கிருஷ்ணகிரி மாவட்டம் ஓசூர் திருமதி ஜி. ரேவதி மோகன் ஆகிய நால்வருக்கும் தலா 10 கிராம் தங்கப் பதக்கத்துடன் பாராட்டுச் சான்றிதழ்களையும் ;

ஊனமுற்றோர் நலனுக்குச் சிறப்பாகப் பணியாற்றிய "சிறந்த நிறுவனத்திற்கான" விருது, திருச்சியைச் சேர்ந்த "விடிவெள்ளி" எனும் புனித அன்னாள் சிறப்புப் பள்ளி; மகளிர் விழிப்புணர்வு பெற்று எழுச்சி பெறும் வகையில் சிறப்பாகத் தொண்டாற்றிய "சிறந்த நிறுவனத்திற்கான விருது" திண்டுக்கல் மாவட்டம் நல்லம்பட்டியில் செயல்பட்டு வரும் ஊரகக் கல்வி வளர்ச்சி முகமை (READ) ஆகிய இரண்டு நிறுவனங்களுக்கும் தலா 10 கிராம் தங்கப் பதக்கம், பாராட்டுச் சான்றிதழ் ஆகியவற்றுடன் 50 ஆயிரம் ரூபாய் ரொக்கப் பரிசுகளையும் முதலமைச்சர் கலைஞர் வழங்கிப் பாராட்டினார்.

ஊனமுற்றோர் மற்றும் மகளிர் நலனுக்காகச் சிறந்த முறையில் தொண்டாற்றிய மாவட்ட ஆட்சியர்களுக்கான விருதுகளுக்கு மதுரை மாவட்ட ஆட்சியர் திரு எஸ்.எஸ். ஜவஹர், இ.ஆ.ப., கரூர் மாவட்ட ஆட்சியர் திரு ட்டி.என். வெங்கடேஷ், இ.ஆ.ப., ஆகியோர் தெரிவு செய்யப்பட்டுள்ளனர். இவ்விருவருக்கும் அடுத்து வரவிருக்கும் மாவட்ட ஆட்சியர் மாநாட்டில் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் கலைஞர் அவர்களால் விருதுகள் வழங்கப்படும்.

* * *

வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9